## களம் காணும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றி வேட்பாளர்களை ஆதரித்து

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் 2-ம் கட்ட தேர்தல் பிரச்சாரம்!

## நெல்லையில் தொடங்குகிறார்!

**தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.**

**இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், இரண்டாம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 3ஆம் தேதி திருநெல்வேலியில் தொடங்குகிறார்.**

**தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற் போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரண்டாம் கட்டமாக திருநெல்வேலியில் பரப்புரையை தொடங்குகிறார்.**



### தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் சுற்றுப்பயண விவரம்

**03.04.2026 (வெள்ளிக்கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| மாலை 5 மணி | திருநெல்வேலி - பாளையங்கோட்டை (பொதுக்கூட்டம்) | திருநெல்வேலி, அம்பாசமுத்திரம், பாளையங்கோட்டை, நாங்குநேரி, ராதாபுரம் |

**04.04.2026 (சனிக்கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| காலை 9 மணி | நாகர்கோவில் (பொதுக்கூட்டம்) | கன்னியாகுமரி, நாகர்கோவில், குளச்சல், பத்மநாபபுரம், விளவங்கோடு, கிள்ளியூர் |
| மாலை 5 மணி | சங்கரன்கோயில் (பொதுக்கூட்டம்) | சங்கரன்கோயில், ஆலங்குளம், தென்காசி, வாசுதேவநல்லூர், கடையநல்லூர் |

**05.04.2026 (ஞாயிற்றுக்கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| காலை 9 மணி | விருதுநகர் (பொதுக்கூட்டம்) | சாத்தூர், ராஜபாளையம், சிவகாசி, திருவில்லிபுத்தூர், திருச்சுழி, அருப்புக்கோட்டை, விருதுநகர் |
| மாலை 5 மணி | திருமங்கலம் (பொதுக்கூட்டம்) | மேலூர், மதுரை கிழக்கு, சோழவந்தான், மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மத்தி, மதுரை மேற்கு, திருப்பரங்குன்றம், திருமங்கலம், உசிலம்பட்டி |

**குறிப்பு :** கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள் : 01.04.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

---

## சீர்காழி (தனி) தொகுதியிலும்

# ம.தி.மு.க. வேட்பாளர் உதயசூரியன் சின்னத்தில் போட்டி!

### ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அறிவிப்பு!



2026, ஏப்ரல் திங்களில் நடைபெற இருக்கும் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில், தி.மு.க. தலைமையிலான மதச்சார் பற்ற முற்போக்கு கூட்டணியில் இடம்பெற்றுள்ள மறுமலர்ச்சி தி.மு.கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் ஒன்றான சீர்காழி (தனி) தொகுதியிலும் கழக வேட்பாளர் வழக்கறிஞர் இரா.செந்தில்செல்வன் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறார் என்பதை தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கிறேன்.

**“தாயகம்”**
சென்னை - 8.
01.04.2026.

**வைகோ**
பொதுச் செயலாளர்,
மறுமலர்ச்சி திராவிட
முன்னேற்றக் கழகம்

---

### 4 தொகுதிகளிலும் ம.தி.மு.க. வேட்பாளர்கள் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுவர்!

# வைகோ முடிவை வரவேற்கிறேன்!

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, ஏப். 2 -

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் ம.தி.மு.க.விற்கு ஒதுக்கப்பட்ட 4 தொகுதிகளிலும் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுவதாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்களின் முடிவை கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வரவேற்று சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

அது வருமாறு :-

**ஆருயிர் அண்ணன் வைகோ அவர்கள் பெருந்தன்மையோடு எடுத்துள்ள இந்த முடிவை நன்றியோடு வரவேற்கிறேன்!**

**மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வெல்க!**

**வெல்வோம்_ஒன்றாக!**

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

### சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் - இன்று

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வேட்பு மனு தாக்கல்!

### தயாநிதி மாறன் எம்.பி. - மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு பங்கேற்பு!

சென்னை, ஏப்.2-

சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட கழக வெற்றி வேட்பாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று 2-4-2026 காலை 11.00 மணியளவில் மிசாபெட் மார்க்கெட், இராயப்பேட்டையில் வேட்பு மனு தாக்கல் செய்கிறார்.

இதில் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன் எம்.பி., சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் அண்ணாநகர் தொகுதி வேட்பாளருமான நே.சிற்றரசு ஆகியோர் பங்கேற்கின்றனர்.

---



# சாதனைகளின் மறுபெயர் தி.மு.க.! சாதனைச் செல்வர்

# ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்!

